**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.277/2024 நாள்- 10.10.2025

**வா.சா.2-முத்துப்பாண்டி**

**<u>வா.சா.2-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்</u>**

நான் 8 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் தற்போது கோண்டா கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். நான் பிரதிவாதியின் நிறுவனத்தில் 2017 ம்ஆண்டு முதல் 2021 ம் ஆண்டு வரை பணிபுரிந்து வந்தேன். பிரதிவாதியின் நிறுவனம் 2021 ம் ஆண் டு ஏப்ரல் மாதம் முடிவிட்டதால் நான் வேலை பார்க்கவில்லை . வாதி தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் நான் தாக்கல் செய்த நிருபணவாக்குமூலத்திற்கு வாதி தான் விவரம் சொன்னார் என்றால் நான்தான் கூறினேன். வ ாதி பிரதிவாதியின் நிறுவனத்தில் மேலாளாராக பணிபுரிந்து வந்ததின் அடிப்படையில் தான் வாதியை எனக்கு தெரியும் என்றால் சரிதான் . பிரதிவாதிக்கு இராஜபாளையத்தில் ஜானகி ராம் ஆட்டோ மொபைல் நிறுவனமும், ஜின்னிங் கம்பெனியும் பலவீடுகளும் சொந்தமாக இருக்கிறது என்றால் சரிதான். அந்த சொத்துக்ள பல கோடி மதிப்பு பெறும் என்றால் சரிதான் . அவ்வாறு இருக்கையில் வாதியிடம் பிரதிவாதி பணம் வாங்க வேண்டி அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதியிடம் பணம் வாங்கிய விவரம் வாதி கூறிதான் எனக்கு தெரியும் என்றால் நான் உடன் இருநதேன். எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும், உண்மையிலேயே தெரிந்திருந்தால் எந்தெந்த தேதிகளில் எங்கு வைத்து எவ்வளவு

தொகை பெற்றிருப்பார் என்று நான் நிருபணவாக்குமூலத்தில் கூறியிருப்பேன் என்றும், எனக்கு தெரியாத காரணத்தினால் தான் கூறவில்லை என்றால் சரியல்ல. வாதியிடம் பிரதிவாதி எவ்வளவு தொகை வாங்கியுள்ளார் என்று எனக்கு தெரியாது. ஏப்ரல் மாதம் 2021ல் பிரதிவாதி கம்பெனியை விற்கப் போகிற விவரம் ெ தரிந்து தான் வாதி பிரதிவாதியிடம் ஏப்ரல் 2021 ம்ஆண்டு உறுதிக்காக கடன் உறுதிசீட்டு எழுதிக் கேட்டார் என்றால் சரிதான் . நான் கடன் உறுதிசீட்டில் எந்த தேதியில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் கையொப்பம் செய்த போது கடன் உறுதிசீட்டு பூர்த்தி செய்ப்பட்டிருந்தது. அந்த கடன் உறுதிசீட்டில் ரெவன்யு முத்திரை ஒட்டப்பட்டிருந்தது. அந்த முத்திரை எவ்வளவு தொகைக்கானது என்று எனக்கு தெரியாது. வாசாஆ.1 கடன் உறுதிசீட்டை யார் எங்கு வைத்து எப்போது எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. கடன் உறுதிசீட்டை எழுதியவர் யார் என்று காட்டப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எங்கு வைத்து எப்போது கையொப்பம் செய்த விவரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதி கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் தான் நான் கடன் உறுதிசீட்டில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் சாட்சி கையொப்பம் செய்ததை வாதியும், சாட்சி ரமேஷ் மட்டும் தான் பார்த்தார்கள் என்றால் உரிமையாளரும் பார்த்தார். நான் கடன் உறுதிசீட்டில் கையொப்பம் செய்ததை பிரதிவாதி பார்க்கவில்லை என்றும் அதனால் தான் நிருபணவாக்குமுலத்தில் யார் யார் கையொப்பம்

செய்ததை பார்த்தார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. வாதியிடம் பிரதிவாதி ஒருபோதும கடன் பெற்றதில்லை என்றும் , வாதிக்கு ஆதரவா க கடன் உறுதிசீட்டு எழுதிக் கொடுத்தில்லை என்றும், பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும என்ற நோக்கத்துடன் கடன் உறுதிசீட்டு உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் ெசய்யப்பட்டுள்ளது என்றும், நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளி க்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.